உதவி இயக்குநர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம்,

**தூத்துக்குடி அவர்களின் செயல்முறை ஆணைகள்**

பிறப்பிப்பவர் : திருமதி.ம.பேச்சியம்மாள், உதவி இயக்குநர்

இடம் : தூத்துக்குடி

**செயல்முறை ஆணை எண். அ1 / 182 /2024, நாள். 12.02.2025.**

பொருள் பணியமைப்பு – வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை வேலைவாய்ப்புப் பிரிவு – தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் – இளநிலை உதவியாளர் பதவியில் பணிமாற்றல் மூலம் நிரப்புதல் – 2023–2024ம் ஆண்டற்கான தேர்ந்த பட்டியல் வெளியிடப்பட்டது – பணி ஒதுக்கீடு ஆணைகள் வெளியிடப்பட்டமை – திரு.ம.ஆதவராஜ், இளநிலை உதவியாளர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தூத்துக்குடிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டமை – பணிவரன்முறைசெய்து ஆணை பிறப்பித்தல் – தொடர்பாக.

பார்வை 1. ஆணையரக இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு), சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். நிர்2/1014 /2024, நாள். 30.01.2024.

2.அரசாணை எண்.130, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத் துறை(என்.1), நாள். 21.07.2008

ஆணை:

பார்வை(1)இல் காணும் ஆணையரக இணை இயக்குநர்(வேலைவாய்ப்பு) அவர்களின் செயல்முறை ஆணைகளின் வாயிலாக தூத்துக்குடி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்திற்கு தமிழ்நாடு அமைச்சுப் பணிகளில் அடங்கும் தொகுதி IV–இல் அடங்கிய இளநிலை உதவியாளர் பணியிடத்தில் தற்காலிகப் பணி நியமனம் செய்யப்பட்டார். அதனைத் தொடர்ந்து, திரு.ம.ஆதவராஜ், இளநிலை உதவியாளர், தூத்துக்குடி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் 12.02.2024 அன்று முற்பகல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்தார்.

இவர் தனது ஓராண்டுப் பணிக்காலத்தை 12.02.2025 பிற்பகல் நிறைவு செய்தார். அதனைத் தொடர்ந்து திரு. ம. ஆதவராஜ், இளநிலை உதவியாளர் அவர்களது பணி, இவர் பணியில் சேர்ந்த நாளான 12.02.2024 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறைப்படுத்தப்படுகிறது.

திரு. ம. ஆதவராஜ், இளநிலை உதவியாளர் அவர்கள் பணியில் சேர்ந்த நாளான 12.02.2024 முற்பகல் முதல் தொடர்ச்சியான 3 ஆண்டுகளுக்குள் 2 ஆண்டு காலத்திற்கு (He is placed under probation for two years in the continuous period of three years) நிபந்தனைக்குட்பட்டு தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார்.

இச்செயல்முறை ஆணைகளைப் பெற்றமைக்கான ஒப்புகை உடன் சமர்ப்பிக்கப்பட்ட வேண்டும்.

உதவி இயக்குநர்
மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும்
தொழில்நெறி வழிகாட்டும் மையம்,
தூத்துக்குடி

பெறுநர்

திரு. ம.ஆதவராஜ், இளநிலை உதவியாளர்,
மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும்
தொழில்நெறி வழிகாட்டும் மையம்,
தூத்துக்குடி

நகல்
1. பணிப்பதிவேடு
2. இருப்புக் கோப்பு–35